# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்


வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● செப்டம்பர் 8, 2018 Weekly E-paper ● September 8, 2018



உள்ளே...




**சோபியா... சோபியா!**
மா.உதயகுமார்



**பிள்ளையார்...?**
வெற்றிச்செல்வன்



**எழுவரை விடுதலை செய்!**
தலையங்கம்


# குட்கா ஊழல்

# குட்கா ஊழல்

## தமிழகத்தின் தலைகுனிவு!

சுப.வீரபாண்டியன்





குட்கா வழக்கில், ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருப்பது குட்கா உற்பத்தி உரிமையாளர் மாதவராவ் மட்டுமில்லை. சென்னையின் முன்னாள் காவல்துறை ஆணையர் ஜார்ஜூம்தான். "ஊழலே நடக்கவில்லை என்று சொல்ல மாட்டேன். ஏதோ நடந்திருக்கிறது" என்பது அவர் ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ள செய்தி!

தி.மு.கழகம் தொடுத்த வழக்கில், இதனை சிபிஐக்கு மாற்ற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து, ஓர் அரசு ஊழியர் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்கிறார் (இது என்ன கூத்து!). இப்போது அந்த மேல் முறையீட்டை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து சி.பி.ஐ. விசாரிக்க ஆணையிட்டுள்ளது. அதன் விளைவாக, அமைச்சர் விஜயபாஸ்கர், டிஜிபி ராஜேந்திரன், முன்னாள் காவல் ஆணையர் ஜார்ஜ் உள்ளிட்டோருக்குத் தொடர்புடைய 40 இடங்களில் சோதனை நடந்துள்ளது.

இத்தனைக்கும் பிறகு, அமைச்சர் விஜயபாஸ்கர் கைது செய்யப்படவில்லை என்பது மட்டுமில்லை, அவர் அமைச்சராகவே பதவியில் தொடர்கிறார்.

இந்த குட்கா ஊழலை மறைக்க அ.தி.மு.க. வின் மூன்று முதலமைச்சர்களும், இரண்டு தலைமைச் செயலாளர்களும், லஞ்ச ஊழல் தடுப்புத் துறையும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட அவமானம் இங்கு நடந்தேறியது. தேதி வாரியாக லஞ்சம் பெற்ற அமைச்சர் உள்ளிட்டோர் பற்றிய விவரங்களை மறைக்க வருமானவரித் துறையே முயல்கிறதோ என்ற அய்யத்தில், விசாரணையில் இறங்கிய டி.ஜி.பி. அசோக் குமார், இரவோடு இரவாக பதவி விலக நேரிட்டது.

வருமான வரித்துறை எழுதிய கடிதத்தைக் காணாமல் ஆக்கிவிட்ட முன்னாள் தலைமைச் செயலாளர் ராம் மோகன் ராவ் இப்போது வேறு அரசு பதவியில் உள்ளார். அந்தக் கடிதம் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை என்று உயர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்துள்ள கிரிஜா வைத்தியநாதன், இப்போது தமிழகத்தின் தலைமைச் செயலாளராக உள்ளார்.

யாருக்கும் வெட்கமில்லை!

திராவிட இயக்கத் தமிழர் பேரவை

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம்



தலைவர் கலைஞருக்குப் புகழ் வணக்கம்

நாள்
11.9.2018 செவ்வாய்
மாலை 6.00 மணி

இடம்
கட்டுமர உணவக அரங்கம், போரூர்.

தலைமை
தோழர் ஆ.சிங்கராயர்

வரவேற்புரை
தோழர் சூரியா

முன்னிலை
நொளம்பூர் வே.ராஜன்
அருணாச்சலம்
மு.மாறன்
முத்தையா குமரான்
ப.எட்வின்
மாகாலட்சுமி
மு.தமிழ்மறவன்
அம்பத்தூர் ராஜூ
வளசை கணேசன்
செந்தாமரைக் கண்ணன்
து.சாந்தசீலன்

புகழுரை
தோழர் சுப.வீரபாண்டியன்
தாயகம் கவி
காரம்பாக்கம் க.கணபதி

நன்றியுரை
தோழர் இளமாறன்



# சோபியா... சோபியா!



மா.உதயகுமார்

"ஆனி முத்து வாங்கி வந்தேன்
ஆவணி வீதியிலே
அள்ளி வைத்துப் பார்த்திருந்தேன்
அழகுக் கைகளிலே
நூலை எடுக்கவும்,
மாலை தொடுக்கவும் நேரம் இல்லையடியோ?"

என்று பாடிக்கொண்டு, வீட்டு வேலைகளைச் செய்யும் பெண்களே வீட்டுக்கும் நாட்டுக்கும் தேவை என்பதாகப் "பாமா விஜயம்" திரைப்படம் சொல்லும்.

இன்றைக்கு இருக்கும் பெண்கள், "ஆனி முத்து வாங்கி வந்தேன்" என்று பாடுபவர்கள் அல்ல.

ஆளும் கட்சியின் மாநிலத் தலைவர் ஒருவர் (குறிப்பாகப் பெண்ணடிமைத்தனத்தை முன்னெடுக்கும் பா.ஜ.க.வின் பெண் தலைவர்)

ஆய்வுப் படிப்பு படிப்பவர் மற்றொருவர்.

இது பெரியாரின் சமூக நீதிப் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

**மாணவியின் முழக்கம்:**

இவர்கள் இருவருக்குமிடையே நடந்த வாக்குவாதம் இந்த வாரம் முழுதும் தேசிய அளவில் பேசுபொருளாகியிருக்கிறது. ஆய்வு மாணவி சோபியா, விமானப் பயணத்தின் போது பா.ஜ.க வின் மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தர்ராஜன் அவர்களைப் பார்த்து "பாசிச பா.ஜ.க ஆட்சி ஒழிக!" என்று முழக்கமிட, அவர் மேல் தமிழிசை புகார் அளிக்க அந்த மாணவி கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

**பெண்ணியப் பார்வை:**

தமிழிசை சவுந்தர்ராஜன் அவர்களைக் கண்டித்துப் பல குரல்கள் ஒலித்தன. அதே நேரத்தில் யாரும் மாணவி சோபியா செய்ததைச் சரியென்றும் சொல்லவில்லை. இந்நேரத்தில் புதிய குரல் அமைப்பின் தோழர் ஓவியா அவர்கள் மாணவி சோபியா செய்த தவற்றை முதன்மையானதாகச் சுட்டிக்காட்டிப் பேசினார். மேலும் பொது வாழ்வில் ஈடுபடும் பெண்களை இந்தச் சமூகம் அணுகுவதில் காணப்படும் வேறுபாட்டையும் எடுத்துரைத்தார்.

தமிழிசை அவர்களைப் பெண் காவலர் கையாண்ட விதத்தைக் காணொளியில் பார்த்த போது ஒரு கட்சியின் ஆண் தலைவரைக் காவலர்கள் இப்படித்தான் கையாளுவார்களா என்ற கேள்வி எழுந்தது. பெண்களிலேயே அதே கட்சியைச் சேர்ந்த நிர்மலா சீதாராமன் அவர்களை இப்படித் தான் காவலர்கள் கையாளுவார்களா என்ற கேள்வியும் எழுந்தது. பாலின வேறுபாட்டோடு வருண வேறுபாடு இருப்பதையும் உணரமுடிகிறது.

இதற்கு முன் தலைவர்கள் முன்னிலையில் முழக்கமிடப்பட்ட போதும், முகத்தில் மையடிக்கப்பட்ட போதும், அச்செயலைச் செய்தவர்களே கண்டிக்கப்பட்டிருக்கின்றனர்.

மென்மையான போக்கைக் கடைப்பிடித்திருக்கலாம் என்கிற கூற்றும் சொல்லப்படுகிறது. அது சரிதான் என்றாலும் தவறு செய்தவர் மீது புகார் கொடுப்பதை எந்த வகையிலும் தவறு என்று சொல்ல முடியாது. புகார் கொடுக்கக் கூடாது என்று சொல்வது தவறான முன்னுதாரணம் ஆகிவிடாதா?

'மென்மையான போக்கு, இருபாலருக்கும் பொதுவாகச் சொல்லப்பட்டாலும், பெண்கள் பொதுவாழ்வில் மென்மையாக இருக்க வேண்டும் என்று சொல்லப்படும்போது அது, குடும்பத்தைப் பெண்கள் அரவணைத்துத் தியாகியாக இருக்க வேண்டும் என்று சொல்லப்படுவதன் நீட்சியாகவே இருக்கிறது' என்கிற கருத்தும் சிந்தனைக்காக வைக்கப்படுகிறது.

**எதிர்ப்பில் நேர்மை:**

எடுத்தவுடனேயே பா.ஜ.க.வின் பக்கம் தான் தவறு என்று முடிவெடுக்காமல் நடந்ததைச் சரியாகப் புரிந்துகொண்டு தவறு செய்தவரை நேர்மையோடு கண்டித்துவிட்டு, பின்னர் பா.ஜ.க வின் அத்துமீறல்களைக் கண்டிக்கும் போதுதான் நம்முடைய கண்டனங்களுக்குரிய மதிப்பு அதிகமாகும் என்பதே இக்கட்டுரையின் மூலம் எடுத்து வைக்கவிரும்பும் கருத்து.

எதிரியை எதிர்க்கும் போது கூட நாம் நேர்மையான முறையைக் கையாள வேண்டும். அப்போது தான் நம்முடைய எதிர்ப்பின் நியாயம் எடுபடும். இல்லாவிட்டால் நம் பக்க நியாயத்திற்குப் பங்கம் ஏற்பட்டுவிடும். பின்னர் மகாபாரதக் கதைகளுக்கும் நமக்கும் வேறுபாடு இல்லாது போய்விடும்.

**பாசிச பா.ஜ.க:**

பொதுவாக விமானப் பயணத்தின் போது நடக்கும் சம்பவங்கள், விமான நிறுவனத்திடம் புகார் செய்யப்படும். அந்நிறுவனம் தவறு இழைத்தவருக்கு விமானத்தில் பயணிக்கத் தடையோ, அபராதமோ விதிப்பதை அன்றாடம் செய்தித்தாள்களில் பார்க்கிறோம். இதில் பிரபல திரைப்பட நடிகர்களும் அமைச்சர்களும் அடங்குவர். ஆனால், இங்கு காவல் துறையினரிடம் புகார் கொடுக்கப்பட்டு தொடர் அச்சுறுத்தல்கள் நிகழ்த்தப்படுவது கண்டனத்துக்குரியது. குறிப்பாக அந்தப் பெண் ஆபாசமாகத் திட்டப்படுவது பெரிய அளவில் கண்டிக்கப்பட வேண்டியது. மாணவி சோபியாவின் செயலைப் பெரிதுபடுத்தாமல் தமிழிசை அவர்களும், காவல் துறையினரும் விட்டுவிட வேண்டும்.

பத்திரிக்கைத் துறையில் பணியாற்றும் பெண்களை இழிவுபடுத்திய எஸ்.வி.சேகரை எட்டும் தூரத்தில் இருந்தும் கைது செய்யாத காவல் துறையினர் இப்போது எம்பிக் குதித்து வருவதைக் கண்டிப்பாகப் 'பாசிசம்' என்று சொல்லாமல் என்ன சொல்வது? அவாளுக்கு ஒரு நியாயம். நமக்கு ஒரு நியாயமா?

இங்கு அரங்கேறுவது பார்ப்பனிய பாசிசம் தான். அந்தப் பாசிசத்திற்குச் சூத்திரர்களே பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். நம் கையை வைத்தே நம் கண்ணைக் குத்துகிறார்கள்.

(மேற்காணும் தோழர் உதயகுமாரின் கட்டுரையின் சில இடங்களில் மாறுபட்ட கருத்துள்ளது. அடுத்த இதழில் அதுகுறித்த என் பார்வையைப் பதிவு செய்வேன்.

– ஆசிரியர்)



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின்

## புதிய அணிகள்

### இளைஞர் அணி

*12.8.2018 அன்று:*

திருச்சியில் நடைபெற்ற திராவிட இயக்கத் தமிழர் பேரவைச் செயற்குழுவின் முடிவுப்படி, இளைஞரணி மறுசீரமைக்கப்படுகிறது. தோழர் நெல்லை சந்தானம் இளைஞரணியின் மாநில அமைப்பாளராகவும், தோழர்கள் கார்த்திக் (சென்னை), ஜெகன் (வேலூர்), சரவணன் (மதுரை) ஆகியோர் துணை அமைப்பாளர்களாகவும் நியமிக்கப் படுகின்றனர்.

### இலக்கிய அணி

*12.8.2018 அன்று:*

திருச்சியில் நடைபெற்ற திராவிட இயக்கத் தமிழர் பேரவைச் செயற்குழுவின் பரிந்துரைப்படி, பேரவையின் வழிகாட்டுதலில், திராவிடத் தமிழர் கலை–இலக்கியப் பேரவை என்னும் அமைப்பு தொடங்கப்படவுள்ளது. தோழர்கள் புலவர் செயபால் சண்முகம் (மதுரை), புலவர் செல்லக் கலைவாணன் (தஞ்சை) ஆகியோர் மாநில அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## பெரம்பூர் கூட்டம்



கடந்த 02.09.2018 ஞாயிறன்று பெரம்பூர், K.R.M.M அரங்கில் "பாசறை முரசு வாசகர் வட்டம்" சார்பில் சுயமரியாதைச் சூரியன் கலைஞர் அவர்களுக்கு நினைவேந்தல் நடைபெற்றது.

தோழர் சுப்பையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேரவைப் பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைவர் கலைஞரின் படத்தை திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வில் முனைவர் கோ.மோகனரங்கன், 'பாசறை முரசு' மு.பாலன் உள்படப் பலர் கலந்து கொண்டனர்.

## வேலூர் கருத்தரங்கம்





கடந்த 01.09.2018 சனிக்கிழமையன்று மாலை 6.00 மணிக்கு, வேலூரில் "திராவிடம் இன்றும் என்றும்" என்ற கருத்தரங்கமும், கலைஞர் விருது வழங்கும் நிகழ்வும் நடைபெற்றன.

இக்கருத்தரங்கத்திற்குத் தோழர் கௌரா இராஜசேகர் தலைமையேற்றார். திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் சிறப்புரையாற்றி, தோழர் சாந்தி நாராயணன் அவர்களுக்குக் கலைஞர் விருது வழங்கினார்.

தோழர்கள் மருத்துவர் முகமது சயி, மருது பாண்டியன், பழனிவேல் மாணிக்கம், பிலால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தோழர் இந்து மீனாட்சி தொகுத்து வழங்க, தோழர் முகில்பாரதி நன்றியுரையுடன் கருத்தரங்கம் நிறைவு பெற்றது.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## எழுவரையும் விடுதலை செய்!

இராஜிவ் காந்தி கொலை தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்ட 7 பேர்கள் கடந்த 27 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறையில் அடைபட்டுக் கிடக்கிறார்கள்.

ஜெயலலிதா முதல்வராக இருந்த சமயம், தமிழக அரசே இவர்கள் விடுதலை குறித்து முடிவு எடுக்கலாம் என்று உச்சநீதி மன்றம் ஒரு தீர்ப்பை அளித்தது.

அதன்படி அமைச்சரவையைக் கூட்டி விடுதலை செய்வதாக ஒரு தீர்மானமும் நிறைவேற்றினார் ஜெயலலிதா.

அவர் செய்த தவறு, அதை மத்திய அரசுக்கு அனுப்பியதுதான்.

இந்த வழக்கு சி.பி.ஐ. மூலம் நடத்தப்பட்டது என்பதனால் அவர்களை விடுதலை செய்ய முடியாது என்றது மத்திய அரசு.

இந்தக் கருத்தை ஏற்ற இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தும் இந்த எழுவரின் விடுதலையை மறுத்துவிட்டார்.

இப்பொழுது மீண்டும் உச்சநீதிமன்ற அமர்வு ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

அதாவது மாநில அரசே அந்த 7 பேர்களின் விடுதலை குறித்த முடிவை எடுக்கலாம். அந்த முடிவை மாநில ஆளுநருக்கு அனுப்ப வேண்டும். 161ஆம் சட்ட விதிப்படி ஆளுநர் முடிவெடுப்பார் என்பது அந்த தீர்ப்பு.

சட்ட விதி 162 மாநில அரசின் அமைச்சரவை எடுக்கும் முடிவு எதுவாக இருந்தாலும், அந்த முடிவை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் ஆளுநருடையது என்று கூறுகிறது.

எனவே, விதி 162இன் படி மாநில அரசு எடுக்கும் முடிவை, அம்மாநில ஆளுநர் அதற்குக் கட்டுப்பட்டு நடைமுறைப்படுத்துவார்.

இந்தச் சட்ட நடைமுறைதான் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் எழுவரின் விடுதலையை உறுதி செய்கிறது. இதற்கான முழு அதிகாரம் தமிழக அரசுக்கு இருக்கிறது.

இதை மிகச் சரியாகத் தமிழக அரசு செய்தால் 7 பேர்களின் விடுதலை நிச்சயம்.

ஆனாலும், மீண்டும் இதில் மத்திய அரசு தலையிட்டு, விடுதலையைத் தடுத்து இழுத்தடிக்கவும் முயலும்.

எடப்பாடி தலைமையிலான இந்த அரசு அதற்கு இடம் கொடுக்காமல், 7 பேர்களின் விடுதலையை மட்டுமே நோக்கமாகக் கொண்டு விரைவாகச் செயல்பட வேண்டும்.

மாறாக பா.ஜ.க.வின் கைப்பாவையாக இதில் செயல்படக்கூடாது.

இளமைக் காலமெல்லாம் இருட்டறையில். 27 ஆண்டுகள் காராகிருகத்தில். கரைந்து போனது அவர்களின் வாழ்க்கை.

பேரறிவாளன், முருகன், சாந்தன், நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய 7 பேரும் பட்ட துயரம் போதும். எஞ்சிய காலங்களிலாவது அவர்கள் வெளிச்சத்தைப் பார்க்கட்டும்.

தமிழக எடப்பாடி அரசு அந்த 7 பேர்களின் விடுதலையை உறுதி செய்து, புதிதாக ஒரு தீர்மாணம் நிறைவேற்றி அதை ஆளுநருக்கு அனுப்ப வேண்டும்.

அந்தத் தீர்மானத்தை ஆளுநரும் ஏற்று, அவரின் ஆணையின் மூலம் அது நடைமுறைக்கு வந்து, 7 பேர்களின் விடுதலையைத் தமிழகம் பார்க்க வேண்டும்.

நடுவில் மத்திய அரசு என்னும் ஆமை புகுந்துவிடாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

செய்யுமா தமிழக அரசு? செய்துதான் ஆகவேண்டும்!



# பிள்ளையார்
## வீட்டுக்கு நாட்டுக்கு உயிருக்குக் கேடு

**வெற்றிச்செல்வன்**




நம் மக்களெல்லாம் வெகு மும்முரமாய்க் கொண்டாடிக் கொண்டிருக்கும் பண்டிகை, விநாயகர் சதுர்த்தி. இது எவ்வளவு காட்டுமிராண்டித்தனம்? இதன் ஆபாசமான கதைகளைத் தெரிந்தால் இவர்கள் இப்படிச் செய்வார்களா?

தந்தை பெரியார்
(விடுதலை 12.09.1951)

பிள்ளையார் பூசைக் கொண்டாட்டங்கள் வழக்கம் போல இந்த ஆண்டும் தொடங்கிவிட்டன. வீதிகள் தோறும் பிரம்மாண்டமான பிள்ளையார் சிலைகள்! கார்கில் கணபதி முதல் கம்ப்யூட்டர் கணபதி வரை! நல்லவேளை வல்லபை கணபதியை வடிவமாக்கும் முயற்சியில் யாரும் ஈடுபடவில்லை. அந்த வரைக்கும் நாம் திருப்திப் பட்டுக் கொள்ளலாம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழ்நாட்டில் அறிமுகமான பிள்ளையார், சங்க இலக்கியக் கடவுளான முருகனுக்கு எப்படி அண்ணனானார் என்று யாரும் கேள்வி கேட்பதில்லை. சரி! பிள்ளையார் கதை என்ன என்று கேட்டால், விதவிதமான கதைகள் சொல்லப்படுகின்றன. பார்வதி குளிக்கச் சென்ற போது தனது உடலிலிருந்த அழுக்கையெல்லாம் திரட்டிச் செய்த உருவமே பிள்ளையார் என்றும், யானைகளைப் பார்த்த பின்னர் கலவி செய்து சிவனும், பார்வதியும் பெற்றெடுத்த குழந்தைதான் பிள்ளையார் என்றும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத பல கதைகள் புராணங்களில் சொல்லப்பட்டுள்ளன. இத்தகைய கதைகளை நமது வீட்டிலுள்ள பிள்ளைகளுக்கோ, அல்லது பெரியவர்களுக்கோ கூடச் சொல்ல முடியுமா? குடும்பத்தில் உள்ளவர்கள் ஒன்றாக அமர்ந்து பிள்ளையாரின் பிறப்பை விவாதிக்க முடியுமா? அதனால்தானே தந்தை பெரியார் இதைக் காட்டுமிராண்டித்தனம் என்றார்.

வீட்டில் இவ்வாறென்றால், இந்த அழுக்குருண்டைப் பிள்ளையாரை வைத்து நாட்டில் எப்படியாவது கலவரம் செய்துவிட வேண்டும் என்று ஒவ்வொரு ஆண்டும் காவிகள் தொடர்முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். விநாயகர் சதுர்த்தியை மத விரோதத்தை வளர்க்கும் ஒரு கருவியாக முதன்முதலில் பயன்படுத்தியவர், பாலகங்காதரத் திலகராவார். 1894 ஆம் ஆண்டு, பள்ளி வாசலின் முன்னால் விநாயகர் சதுர்த்தியின் போது, இந்துக்கள் இசைக்கருவிகள் இசைப்பதை ஆதரித்துத் தமது பத்திரிகைகளிலே தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார். பெரிய அளவிலான ஊர்வலங்களையும், பிரம்மாண்டமான கொண்டாட்டங்களையும் நடத்தினார். கொண்டாட்டங்களில் இஸ்லாமிய மத விரோதப் பாடல்கள் பாடப்பட்டன. இத்தகைய கொண்டாட்டங்கள் மதக் கலவரத்தைத் தூண்டுகின்றன என்று திலகரைக் கோபால கிருஷ்ண கோகலே கண்டித்துள்ளார். மராட்டியத்தில் பிளேக் நோய் பரவியபோது, ஆங்கிலேய அரசு எலிகளை ஒழிப்பதில் தீவிரம் காட்டியது. இதைக் கண்டு, விநாயகரின் வாகனமான எலியைப் பிரிட்டிஷ் அரசு அழிக்கிறது என்று மக்களை அரசுக்கெதிராகத் தூண்டினார் இந்து சனாதன ஆட்சியை நிறுவத் துடித்த திலகர். The Myth of Lokmanya: Tilak and Mass politics in Maharashtra (by Richard Cashman) என்ற நூலில், விநாயகர் சதுர்த்தியைத் திலகர் எவ்வாறு அரசியலாக்கினார் என்பது குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. இன்றும் விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படும் பகுதிகளில் குறிப்பாகப் பிற மதத்தினர் வாழும் இடங்களில் எவ்வளவு பதற்றம் உண்டாக்கப்படுகிறது என்பது நாம் அறிந்த செய்தி.




விநாயகர் சிலைகள் நீர்நிலைகளில் கரையப் பல மாதங்களிலிருந்து ஆண்டுகள் வரை ஆகின்றன. இதனால் நீர்நிலைகள் மாசடைகின்றன. நீர்நிலைகளில் வாழும் உயிரினங்களும் பாதிப்படைகின்றன. பிரம்மாண்டமான விநாயகர் சிலைகளைச் செய்யப் பயன்படுத்தப்படும் ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸ், வினைல் அக்ரலிக், எதைல் க்ளைக்கால் போன்ற வேதிப் பொருட்கள், குருதி அழுத்தம், ஆஸ்துமா, சிறுநீரகப் பாதிப்பு போன்ற நோய்களுக்கு வித்திடுகின்றன. இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் பக்தி என்ற பெயரால், உடலுக்கும், உயிருக்கும் கேடு விளைவிக்கும் தீபாவளி, விநாயகர் சதுர்த்தி போன்ற பண்டிகைகளைக் கொண்டாடிக் கொண்டிருக்கப் போகிறோம்.

விநாயகர் சதுர்த்தி மூடநம்பிக்கையையும், ஆபாசத்தையும் பரப்புகிறது என்ற காரணத்தால்தானே பிள்ளையார் சிலையை உடைக்கும் போராட்டத்தை 1953இல் தந்தை பெரியார் நடத்தினார். மண்ணைத் தோண்டிக் கடலை நிரப்பும் முட்டாள்தனமான செயல் வேறு எந்த நாட்டிலாவது நடைபெறுவதுண்டா? வீட்டுக்கும், நாட்டுக்கும், உயிருக்கும் கேடு விளைவிக்கும் இப்பண்டிகையைத் தமிழர்கள் கொண்டாடுவதைப் பற்றி இனியாவது சிந்திக்க வேண்டும்.

●

# வினாவும்? விடையும்!



**சாதி மதமற்ற தமிழ்த் தேசியத்திற்கும் திராவிடத்திற்கும் என்ன வேறுபாடு?**

- து.செல்வகுமார், இராசபாளையம்



சாதி மதமற்ற என்பதை விட, சமத்துவமும், அறிவியல் சிந்தனையும் கொண்ட தமிழ்த் தேசியம் திராவிடம்தான். எனினும் ஒரு வேறுபாடு உண்டு. தமிழ்த் தேசியம் என்பது அரசு, அரசியல் சார்புடைய சொல்லாடல்! திராவிடம் என்பது சமூகச் சார்புடைய கோட்பாடு!

இறையாண்மை உடைய தமிழ் தேசக் குடியரசை இலக்காகக் கொண்டது தமிழ்த் தேசியம். தனி நாடாக இருந்தாலும், இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தாலும் சமூக சமத்துவம் வேண்டும் என்பதையும், பகுத்தறிவுச் சிந்தனை, செயல்பாடுகள் மேம்பாடு அடைய வேண்டும் என்பதையும் இலக்காகக் கொண்டது திராவிடம். இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கொள்கை தனி நாடு கோருவது! திராவிடக் கொள்கை, .இந்தியாவில் மாநில சுயாட்சி பெற்ற ஒரு மாநிலமாகத் தமிழகம் அமைவதும், சாதி, மத, பாலின சமத்துவம் உடைய, பகுத்தறிவுச் சமூகத்தைக் கட்டமைப்பதும் ஆகும்!

# எதிர்வினை





இந்த வார இதழில் நீட் தேர்வைப் பற்றிய கட்டுரை அருமை, கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவது மட்டுமின்றி கூட்டாட்சி அரசு தான் நிரந்தரத் தீர்வு. எழில். இளங்கோவனின் கிரேக்கமும் தமிழகமும் கட்டுரையும் அருமை.

*- நவலடி, பெங்களூரு*



மு.க.ஸ்டாலினைக் கலைஞருடன் ஒப்பிடுவது இயல்புதான் என்றாலும் அவரவர் தனித்திறன், குணம் ஆகியவற்றால் கலைஞரைத் தாண்டுவார். தாண்டுவதே தலைவர் கலைஞருக்குப் பெருமை என்பது பொன் எழுத்துகளால் பொறிக்க வேண்டியவை

*- ச.சர்ச்சில், திண்டுக்கல்*




கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவதே இறுதியான தீர்வாக அமையும் என்பது மிகச் சரியான வாதமே. அந்த ஒற்றைக் கோரிக்கையை வலுவான வாதங்களோடு ஒத்த கருத்துடைய பிற மாநில கட்சிகள் / இயக்கங்களோடு சேர்ந்து நாடு தழுவியதொரு போராட்டமாக எடுத்துச் செல்ல வேண்டும். அனைத்து திராவிட / தலித் / இடதுசாரி / முற்போக்கு இயக்கங்களின் ஆதரவோடு தி.மு.க. இதை முன்னெடுத்துச் சென்றால் சிறப்பாக இருக்கும்.


*- சந்திரசேகர், கோயம்புத்தூர்*



'சாதி ஒழிப்பு ஒன்றே தீர்வு' ஆதித்தமிழர் பேரவையின் தலைவர் திரு.இரா.அதியமான் அவர்களின் நேர்காணலைப் படித்தேன். மனதை வருடியது, அவரின் பதில்கள். அத்தனையும் நியாயமானவை. மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் சூழலை மாற்ற ஒரு அறிவியல் வளர்ச்சி பயன்படாதபோது, விண்வெளிக்கு எத்தனை செயற்கைக் கோள்களை அனுப்பி என்ன பயன்?


*- வினோத் விஜயகுமார், மதுரை*



# மலேசியாவில் தந்தை பெரியாரின் 140 ஆவது பிறந்தநாள் விழா

**தோழர் சிற்பி செல்வராசு பங்கேற்கிறார்**



மலேசியாவில் மாந்தநேய திராவிடர் கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16.09.2018 ஞாயிறு அன்று பிற்பகல் 2.00 மணிக்கு, கோலாலம்பூர் தான்சிறி டத்தோ, கே.ஆர்.சோமா அரங்கில் தந்தை பெரியார் அவர்களின் 140ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா நிகழ்வு நடைபெறுகிறது. இந்நிகழ்வில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் சிற்பி செல்வராஜ் பட்டிமன்றத் தலைமை ஏற்கவும், சிறப்புரை ஆற்றவும் மலேசியா பயணம் ஆகிறார்.

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.